World Christian Fellowship
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *1*தீமோத்தேயு

**ஆசிரியர்:** *பவுல் தர்சு பட்ட்டணத்தான், யூத குல பெற்றோருக்கு பிறந்தவர். இவர் ரோம குடிமகன் மற்றும் கிரேக்க மொழியை நன்கு பேசக்கொடியவர். கூடாரம் செய்பவர்.*

**எழுதப்பட்ட வருடம்**:

| **நிருபத்தின் பெயர்** | **எழுதிய வருடம்** |
|---|---|
| *1 தெசலோனிக்கேயர்* | *52 கி.பி.* |
| *2 தெசலோனிக்கேயர்* | *52 கி.பி.* |
| *1 கொரிந்தியர்* | *57 கி.பி.* |
| *2 கொரிந்தியர்* | *57 கி.பி.* |
| *கலாத்தியர்* | *55-57 AD* |
| *ரோமர்* | *57 கி.பி.* |
| *எபேசியர்* | *62 கி.பி.* |
| *பிலிப்பியர்* | *62 கி.பி.* |
| *கொலோசெயர்* | *52 கி.பி.* |
| *பிலேமோன்* | *63 கி.பி.* |
| *எபிரேயர்* | *64-65 கி.பி.* |

| | |
|---|---|
| *தீத்து* | *64-65 கி.பி.* |
| *1தீமோத்தேயு* | *64-65 கி.பி.* |
| *2 தீமோத்தேயு* | *66-67 கி.பி.* |

*அப்போஸ்தலனாகிய பவுல், போதக ஊழியத்தை குறித்து மூன்று கடிதங்கள் ரோம சிறையில் மரிக்கும் முன் எழுதினார். அவை I தீமோத்தேயு, II தீமோத்தேயு மற்றும் தீத்து-வுக்கு எழுதின கடிதங்கள். சிலர் இக்கடிதத்தை எழுதியது யார் என்று கேள்வி எழுப்புவர் ஆயினும், இத்தெய் எழுதியது அப்போஸ்தலனாகிய பவுல் தான் என்பது மிகவும் தெளிவாக தெரிகிறது.*

## ***எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்:***

*வரலாற்று ஆய்வாளர்களின்படி, பவுல் கிபி 68-ல் நீரோ மன்னனால் கொலை செய்யப்பட்டு இரத்த சாட்சியாக மரிக்கிறார். இக்காலகட்டத்தின் தொடக்கத்தில் (கிபி 62 – 64-ல்) பவுலால் இந்த கடிதங்கள் எழுதப்பட்டிருக்கலாம்.*

*பவுல் கிரேக்க தேசத்தின் வாடபகுதியில் உள்ள மக்கெதோனியாவிலிருந்து எழுதியிருக்கலாம் (I தீமோத்தேயு 1:3).*

## ***பின்னணி:***

*இவ்விரண்டு கடிதங்களும் பவுலின் ஆவிக்குரிய மகனான தீமோத்தேயுவுக்கு அவரின் பெயரை குறிப்பிட்டு எழுதப்பட்டவை.*

*தீமோத்தேயு கலாத்திய நாட்டிலுள்ள ரோம குடியிருப்புகளில் ஒன்றான லீஸ்திரா என்னும் இடத்தை சேர்ந்தவர். இவருடைய தந்தை யூதரல்லாதவர் தாய் ஒரு யூத ஸ்திரீ.*

*அப்போஸ்தலர் 16:1-3*

*அப்போஸ்தலனாகிய பவுல் இவரை தனது பயணத்தில் இணைத்துக்கொண்டார். இவருடைய தாயும், பாட்டியும் ஆண்டவரில் உறுதியான விசுவாசிகள். ஆதலால் தீமோத்தேயு சிறு வயதிலிருந்தே விசுவாசத்தில் வளர்க்கப்பட்டார் (II தீமோத்தேயு 1:5 & 3:14-15).*

*பவுலும் சபையின் மூப்பரும் தீமோத்தேயுவின் தலையில் கை வைத்து ஜெபித்து அவரை சுவிசேஷ (மிஷனரி) ஊழியத்திற்கு அனுப்பிவைத்தார்கள் (I தீமோத்தேயு 1:18 & 4:14).*

*அப்போஸ்தலர் 17:14-15; 18:5; 19:22 & 20:4-6 வசனங்களிலிருந்து தீமோத்தேயு அப்போஸ்தலனாகிய பவுலின் சுவிசேஷ பிரயாணத்தில் துணையாக இருந்தார் என்பது தெரிகிறது.*

*பவுல் தன்னை தீமோத்தேயுவுக்கு தகப்பன் என்றே அறிவிக்கிறார் (பிலிப்பியர் 2:22).*

*தீமோத்தேயு பவுலின் மகன் (I தீமோத்தேயு 1:2, 18; I கொரிந்தியர் 4:17; II தீமோத்தேயு 1:2; 2:1)*

*தீமோத்தேயு பவுல் ஸ்தாபித்த பல சபைகளில் பணி புரிந்தவர்.*

*தெசலோனிக்கேயர் – I தெசலோனிக்கேயர் 3:2;6*

*கொரிந்து – I கொரிந்தியர் 4:17; 16:10*

*பிலிப்பாயு – பிலிப்பியர் 2:19 &23*

*எபேசு – I தீமோத்தேயு 1:3*

*தீமோத்தேயுவை குறித்த வேறு உறுதி செய்யப்படாத குறிப்புகள் கூறுவதாவது – 97 ஆம் ஆண்டு தீனாளுக்கு ஏறேடுக்கப்பட்ட ஊர்வலத்தை மறித்து 80 வயது நிரம்பிய சபையின் பிஷப் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். அதை கேட்ட*

*பாகாலின் மக்கள், அவரை தெருவிலே இழுத்து கல்லால் அடித்து கொலை செய்தார்கள்.*

**நோக்கம்:**

*பவுல் எபேசுவிலே சபையை தனது மூன்றாம் மிஷனரி பயணத்தின் ஆரம்ப நாட்களில் நிறுவி அங்கு சுமார் மூன்று வருடங்கள் தங்கியிருந்தார் (அப்போஸ்தலர் 19; 20:31).*

*கள்ள போதகர்கள் சிலர் சபையின் தலைமையிலிருந்தே தோன்றி சபையை விசுவாசத்தில் நிலைகுலைய செய்வார்கள் என்று எபேசு சபையின் மூப்பர்களுக்கு பவுல் எச்சரித்திருந்தார் (அப்போஸ்தலர் 20:29-30).*

*அவரது எச்சரித்தபடியே கள்ள போதகர்கள் தோன்றியதால் இந்த கடிதத்தை எழுதுகிறார் (I தீமோத்தேயு 1:6, 19; 4:1-2; 6:3-5, 10, 21).*

*ஆகையால் பவுல் முதலாவது சபையின் வாழ்வை குறித்தும் அடுத்து சபையின் தலைவர்களை குறித்தும் எழுதுகிறார்.*

*<u>கள்ள போதகங்கள் எங்கிருந்து வருகின்றன?</u>*

*சபைக்குள்ளேயே இருந்து: I தீமோத்தேயு 1:6, 19; 4:1; 6:10, 21; II தீமோத்தேயு 2:18; 4:4.*

*<u>கள்ள போதகங்கள் நிலவ காரங்கள் என்ன?</u>*

| | |
|---|---|
| *கட்டுக்கதைகள்* | *I தீமோத்தேயு 1:4; 4:7; II தீமோத்தேயு 4:4* |
| *வம்சவரலாறுகள்* | *I தீமோத்தேயு 1:4* |
| *வாக்குவாதங்கள்* | *I தீமோத்தேயு 6:4* |
| *தர்க்கங்கள்* | *I தீமோத்தேயு 1:4; 6:4* |

| | |
|---|---|
| ஞானம் | *I தீமோத்தேயு 6:20* |
| வீண்பேச்சு | *I தீமோத்தேயு 1:6* |
| சீர்கேடான வீண்பேச்சு | *I தீமோத்தேயு 6:20* |
| விவாகம், சில போஜன-பதார்த்தங்களுக்கும் எதிராக | *I தீமோத்தேயு 4:3* |
| நியாயப்பிரமாணத்தை தவறாக புரிந்து கொள்ளுதல் | *I தீமோத்தேயு 1:7* |
| ஜெபத்தில் வரைமுறைகள் | *I தீமோத்தேயு 2: 1-7* |

## சபைக்குள் தலைமையின் பிரச்சனைகள்:

அப்போஸ்தலனாகிய பவுல் சபையில் தலைமை பொறுப்பில் இருப்பவர்களில் காணப்படவேண்டிய குணங்களை குறித்து கூறுகிறார். இன்னும் சொல்லப்போனால் இதுவே மிக நீண்ட விரிவுரை *(I தீமோத்தேயு 3:2-13).*

*I தீமோத்தேயு 3:2-7* இவையே பொதுவாக ஆயர் நியமன ஆராதனைகளில் நாம் கேட்கக்கூடியவை.

மட்டுமல்லாது சபையின் மூப்பரையும் ஆசிரியர்களையும் கௌரவிக்கும் முறையை வேறுபடுத்தி காண்பிக்கிறார் *I தீமோத்தேயு 5:17.*

பவுல் கூடிய மட்டும் நடைமுறை எடுத்துக்காட்டுகளை கொண்டு சபையின் மூப்பரையும் தலைவர்களையும் கையாளும் விதத்தை விளக்குகிறார்.

## முக்கியமான சத்தியம்:

*கள்ள போதகங்களை தவிர்க்க முடியாது ஆயினும் சபையில் அவற்றை எதிர்க்க வேண்டும்*

*நியாயப்பிரமாண போதனைகள் மக்களை மெய்யான சுவிசேஷத்திலிருந்து விலகச்செய்து நடிகர்களாக மாற்றிவிடும்.*

*சபையின் ஆராதனையிலும் அதிகாரத்திலும் ஒரு ஒழுக்கம் இருக்க வேண்டும்.*

*சபையில் வெவ்வேறு குழுவினருக்கு பிரத்தியேகமான தேவைகள் இருக்கும் என்பதை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.*

*ஊழியத்திலோ அனுதின கிறிஸ்தவ வாழ்விலோ பணத்தின் மீது பற்றுக்கு இடமேயில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.*

## சுருக்க வரைவுரை:

| | |
|---|---|
| *தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்த்து* | *1:1-2* |
| *எபேசுவில் கள்ள போதகங்கள்* | *1:3-7* |
| *நியாயப்பிரமாணத்தின் நோக்கம்* | *1:8-11* |
| *பவுளினாலும் சுவிசெஷத்தினாலும் கர்த்தர் மகிமைப்படுகிறார்* | *1:12-17* |
| *நல்ல போராட்டத்தை போராடு* | *1:18-20* |
| *எல்லோருக்காகவும் ஜெபம்* | *2:1-4* |
| *ஒரே கடவுள் அவரை அடைய ஒரே ஒரு வழி* | *2:5-7* |

| | |
|---|---|
| *சபையின் ஆண்களுக்கும் பெண்களுக்கும் விதிமுறைகள்* | *2:8-15* |
| *சபையின் மூப்பருக்கான தகுதிகள்* | *3:1-7* |
| *சபையின் உதவியாளருக்கான தகுதிகள்* | *3:8-13* |
| *பரம இரகசியம்* | *3:14-16* |
| *கள்ள போதகர்களை குறித்து எச்சரிக்கை* | *4:1-5* |
| *பொய்யிலிருந்து பாதுகாப்பது எப்படி* | *4:6-16* |
| *சபையின் மக்களை கவனித்தல்* | *5:1-2* |
| *விதவைகளை தாங்குவதால் மகிமைப்படுதல்* | *5:3-16* |
| *மூப்பர்களின் கடமை மற்றும் அவர்களை கௌரவித்தல்* | *5:17-25* |
| *குருவானவரை கௌரவித்தல்* | *6:1-2* |
| *பெராசையிநிமித்தம் போதகத்தில் பிழைகள்* | *6:3-10* |
| *தீமோத்தேயுவுக்கான குறிப்புகள்* | *6:11-16* |
| *செல்வந்தர்களுக்கு குறிப்புகள்* | *6:17-19* |
| *தீமோத்தேயுவுக்கு இறுதி அழைப்பு* | *6:20-21* |

*இக்கடிதத்தின் மற்றுமொரு முக்கியமான குறிப்பு, கள்ள போதகங்களை குறித்து பவுல் இரண்டாவது கடிதத்திலும் கூறுகிறார். அவர்களை சாத்தனுக்கு ஒப்புகொடுப்பதாக எச்சரிக்கிறார்.*

*இமெனெயும் அலெக்சந்தரும் பிலேத்தும், I தீமோத்தேயு 1:20 II தீமோத்தேயு 2:17*

*மற்றும் சில தலைவர்கள் தங்கள் பொருளாதார ஆதாயத்திற்காக சபையில் சேர்ந்தார்கள் I தீமோத்தேயு 6:5 & 10.*

*இந்த தலைவர்கள் சபையில் பெரும் பிரிவினைக்காரர்களும், பெண்களை வசப்படுத்துகிரவர்களாகவும் இருந்தார்கள் I தீமோத்தேயு 2:14; II தீமோத்தேயு 3:6-7.*

*அப்போஸ்தலனாகிய பவுல் இறையியலை குறித்து குறிப்பாக இரட்சிப்பை குறித்து தெளிவாக இக்கடிதத்தில் விளக்குகிறார்.*

- *கர்த்தர் நமக்காக இரட்சிப்பை இயேசு கிறிஸ்துவின் மூலம் நிறைவேற்றினார், I தீமோத்தேயு 1:13-16 & 2:3-6 (இந்த இறையியல் கருத்தை நிலைநிறுத்தும்படி கிருபையினால் இரட்சிப்பு மற்றும் கர்த்தருக்கும் மனுக்குலத்துக்கும் நடுவே இயேசு கிறிஸ்துவாகிய ஒரே மத்தியஸ்தர் என்ற கருத்துகளும் சொல்லப்படுகின்றன)*

- *Substitutionary atonement – பாவிகளாகிய நமக்கு பதிலாக இயேசு கிறிஸ்து மரித்தார் என்ற கருத்து அழுத்தமாக சொல்லப்படுகிறது I தீமோத்தேயு 2:6,*

*மட்டுமல்லாது திக்கற்றவர்களும் விதவைகளும் கவனிக்கப்ப்படும்படி நீண்ட ஒரு குறிப்பை பவுல் எழுதுவதன் மூலம் அவர் ஆணாதிக்கத்தை சார்ந்தவர் என்ற கருத்தை உடைக்கிறார்.*

## இன்றைய பயன்பாடு:

1. **நாம் செல்லும் சபை "கர்த்தத்துவத்தை" வெளிப்படுத்தும் ஒரு முக்கிய அமைப்பாகும்**

*கர்த்தர் சபையை தம்முடைய நீதியை வெளிப்படுத்தும்படி அமைத்தார். நாம் ஒவ்வொருவரும் உலகிற்கு ஒளியாக இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய வெளிச்சம் பிரகாசிப்பதால் ஜனங்கள் கர்த்தரின் நாமத்தை மகிமைப்படுத்தும்படி அவர் நம்மை அழைத்திருக்கிறார் (மத்தேயு 5:14-16).*

*நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட நபர்களாக அழைக்கப்பட்டபடியே நம் அனைவரும் இணைந்து ஒரு அமைப்பாகவும் அவருடைய ஒளியை பிரகாசிக்கும்படி அழைக்கப்படுகிறோம். ஆகவே நாம் செல்லுகிற சபை கர்த்தத்துவத்தை எளிப்படுத்தும்போது இந்த உலகம் அதை கண்டு கர்த்தரை அறிந்துகொள்ளும்.*

*கர்த்தத்துவத்தை நாம் எப்படி வெளிப்படுத்துவது?*

*பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் கிறிஸ்துவை வெளிப்படுத்துவதன் மூலம்! இதுவே அப்போஸ்தலனாகிய பவல் இக்கடிதத்தில் எழுதிய கர்த்தத்துவத்தின் இரகசியம்.*

*இந்த நோக்கத்திற்காகவே சபைகள் தலைவர்களை ஸ்தாபிக்கின்றன. போதகங்கள் மூலமாகவும், மக்களை உற்சாகப்படுத்தியும், உதாரணமாக வாழ்ந்தும் தலைவர்கள் இந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்.*

*சபையின் தலைவர் கர்த்தரின் நீதியை வெளிப்படுத்தும்படி ஜனங்களை தயார் படுத்த வேண்டும், முக்கியமாக அவற்றை தங்களது வாழ்வில் சாட்சியாக வாழ்ந்து காட்டுவதன் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.*

*இயேசு “நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்” (மத்தேயு 5:14) என்று சொன்னாரே தவிர “நீங்கள் உலகத்திற்கு ஒளியை அறிவியுங்கள்” என்று சொல்லவில்லை.*

### *2. சபையின் கடமைகள்*

*i.* *முதலாவது – நோக்கம்: சபை எவ்வித கலப்புமில்லாத சுத்தமான சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும். சிறியவற்றில் வீணாய் கவனம் செலுத்தக்கூடாது. சத்தியம் திரிக்கப்படாதபடி பாதுகாக்க வேண்டும். இக்கடிதத்தில் கர்த்தரின் சத்தியத்திற்கு வரும் அபாயங்களை குறித்து தீமோத்தேயுவை பவுல் எச்சரிக்கிறார்.*

*கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கும் விதத்தில் நம்முடைய படைப்பாற்றலை வெளிப்படுத்தலாம். ஆனால் கர்த்தருடைய வார்த்தையில் நம்முடைய படைப்பாற்றலை வெளிப்படுத்தாதபடி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். நாம் வார்த்தையை கொண்டு செல்லும் பணியில் இருக்கிறோமே தவிர புதிதாக சத்தியத்தை உருவாக்கும் பணியில் அல்ல என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.*

*ii.* *இரண்டாவது - ஆராதனை: சபையின் ஜெபமும் ஆராதனையும் ஓயாமல் ஒலிக்க வேண்டும். சபையின் வழக்கத்தில் ஜெபத்தின் முக்கியத்துவத்தை குறித்த நெறிமுறைகளை சொல்லும்போது பவுல் இதை தெளிவாக குறிப்பிடுகிறார் (2:1-7).*

*iii.* *மூன்றாவதாக – தலைவர்கள்: கர்த்தரின் ஊழியத்திற்கென்று தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் தலைவர்களாக இருக்கும்போது தான் சபை கர்த்தரின் ஊழியத்தில் விழாமல் நிலைநிற்க முடியும். சத்தியத்தை*

*வாழ்ந்து காட்டுவதும், எப்பொழுதும் ஊழியம் செய்து சீஷர்களை உற்சாகப்படுதும் சபையின் தலைவர்களே. ஆகவே தகுதியுள்ள தலைவர்கள் சபைக்கு மிகவம் அவசியம்.*

*iv.* *நான்காவதாக – தலைவர்களின் தனிப்பட்ட சாட்சி மிகவும் அத்தியாவசியம்.*

### *3. மகா துதி*

*I தீமோத்தேயு* ***3:16, அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது.***

***தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்,***

***ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்,***

***தேவதூதர்களால் காணப்பட்டார்,***

***புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார்,***

***உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்,***

***மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்.***

*i.* *கர்த்தர் அணிதனாக அவதரித்து கிறிஸ்துவாக நம்மிடையே வந்தார் . கிறிஸ்துவே கர்த்தர். ஆயினும், அவர் மனுடவதாரம் எடுத்து நாம் அவரை அறியும்படிக்கு நம்மிடையே வந்தார்.*

*ii.* *ஆண்டவராகிய இயேசு தாமே வாக்குபண்ணப்பட்ட மேசியா என்றும் கிறிஸ்து என்றும் தம்மை வெளிப்படுத்தினார். தாமே மனுஷ குமாரன் என்றும் தாம் பிதாவுக்கு நிகரானவர் என்றும் இயேசு கூறினார். அவரே கர்த்தர். ஆவியானவரம் இதை சத்தியமென்று*

*ஒப்புக்கொள்கிறார். ஆவியானவர், ஏசுவே மனுஷ குமாரன் என்றும் அவரே பரிபூரணமானவர் என்றும் ஆவியானவர் பிரகடனப்படுத்துகிறார். இயேசு குற்றாமற்றாவர், பாவத்தை அறியாதவர். ஆயினும் இயேசு மனுக்குலமாகிய நம் அனைவரது பாவத்தையும் சிலுவையிலே சுமந்து மரித்தார்.*

*iii.* *இயேசு இவ்வுலகத்திலே வாழ்ந்தபோது தேவ தூதர்களும் சில வேளைகளில் சம்பந்தப்பட்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவரே மெய்ப்பர்களிடத்தில் அவர் பிறந்த நற்செய்தியை அறிவித்தவர் (லூக்கா 2:9).*

*இயேசு, பிசாசினால் சோதிக்கப்பட்ட பிறகு தேவ தூதர்கள் அவரிடத்திற்கு வந்தார்கள் (மத்தேயு 4:11).*

*கெத்சமனே தோட்டத்தில் அவர் ஜெபித்தபோது ஒரு தூதன் அவருக்கு உதவினார் (லூக்கா 22:43).*

*இயேசு உயிர்த்தெழுந்தபோது ஒரு தூதன் கல்லறையை மூடியிருந்த கல்லை புரட்டினார் (மத்தேயு 28:2-7).*

*அந்த தூதன் அந்த கல்லில் அமர்த்திருந்தார். சில பெண்கள் வந்தபோது அந்த தூதன் இயேசு உயிரோடு எழுந்தார் என்று கூறினார், இரண்டு தூதர்கள் கல்லறையின் உள்ளே மரியாளோடு பேசினார்கள் (யோவான் 20:11-13).*

*பின்னர், இயேசு பூலோகம் விட்டு பரலோகத்திற்கு ஏறி சென்ற போது இரண்டு தூதர்கள் அங்கே இருந்தனர். அவர்கள், இயேசுவின் நண்பர்களிடத்தில் இயேசு திரும்பவும் வருவார் என்று கூறினார்கள் (அப்போஸ்தலர் 1:10-11).*

iv. இயேசு உயிர்த்தெழுந்த பிறகு, தம்முடைய சீஷர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும், சகல தேசங்களிலும் சீஷர்களை ஏற்படுத்தவும் கட்டளையிட்டார் (மத்தேயு 28:18-20).

v. ஆதி கிறிஸ்தவர்கள் வெளியே சென்று கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கித்தபோது சிலர் விசுவாசித்தார்கள். விசுவாசித்தவர்கள் கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்து கிறிஸ்தவர்களாக மாறினர்.

vi. ஆண்டவராகிய இயேசு உயிர்த்தெழுந்த பின்பு இவ்வுலகத்தை விட்டு கர்த்தர் வாசம் செய்யும் பிரகாசமான ஒளியாகிய பரலோகத்திற்குள் சென்றார். கர்த்தர் ஏசுவிற்கு மகிமையையும் துதியையும் பரலோகத்தையும் பூலோகத்தையும் ஆளும் ஆளுகையையும் கொடுத்தார்.

இந்த துதியிலிருந்து கிறிஸ்தவர்களிடம் காணப்பட வேண்டிய ஆறு குணங்களை நமக்கு விளக்குகிறார்.

- நாம் எப்போதும் நலமானதையும் சரியானதையும் (நேர்மையானதையும்) செய்ய வேண்டும்.
- நாம் கர்த்தரை பிரியப்படுத்த வாழ வேண்டும்.
- நாம் எப்பொழுதும் ஆண்டவரை விசுவாசித்து அவரில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.
- நாம் கர்த்தரையும் பிறரையும் நேசிக்க வேண்டும்.
- நாம் பொறுமையுடனும் உறுதியானவர்களாகவும் இருக்க வேண்டும்.
- நாம் மென்மையானவர்களாய் இருந்து, பிறர் தீமை செய்யும்போது பதிலுக்கு ஒருக்காலும் தீமை செய்யாமல் இருக்க வேண்டும்.

### *4.* கள்ள உபதேசங்களை குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்

*எந்த போதனை அடிப்படை விசுவாச உபதேசத்திலிருந்து விலகுகிறதோ அதுவே கள்ள போதகம். பவுல் எழுதிய இக்கடிதத்தின் மைய கருத்து சுவிசேஷமே. ஆகவே தவறான உபதேசங்களை ஏற்றுக்கொல்வோமானால் சபை உலகிற்குமுன் தன்னுடைய சாட்சியிலிருந்து வழு-விழந்துபோகும். ஆகவே சபையின் கோட்பாடுகளை பாதுகாக்க வேண்டியது நம் கடமை.*

### *5.* ஜெபிக்க தவறுவது குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்

*நமது தனிப்பட்ட மற்றும் பொதுவான ஜெப வாழ்க்கையில் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.*

*அப்போஸ்தலனாகிய பவுல் இக்கடிதத்தில் இதைக்குறித்து நம்மை எச்சரிக்கிறார், ஜெபிக்க தவறும்போது கர்த்தருடைய மகிமயிலிருந்து நாம் விழுந்துபோகிறோம்..*

### *6. Do’s and Don’ts –* செய்வதும் செய்யத்தகாததும்

| **செய்வது** | **செய்யத்தகாதது** |
|---|---|
| *சத்தியத்தையே போதிக்க வேண்டும் 1:3* | *கட்டுகதைகளுக்கும் வரலாற்றுக்கும் செவி கொடுக்காதிருங்கள் 1:4* |
| *பாவிகளுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும் 1:15-18* | *கதைகளை நிராகரிக்க வேண்டும் 4:7* |

| | |
|---|---|
| எல்லோருக்காகவும் ஜெபிக்கவும் வேண்டுதலும் செய்ய வேண்டும் *2:1* | வரங்களை புறக்கணிக்க வேண்டாம் *4:14* |
| தகுதியான தலைவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் *3:1-15* | மூத்தவர்களை பழிக்காமல் அவர்களுக்கு புத்தி சொல்ல வேண்டும் *5:1* |
| பிறரை சத்தியத்தில் வழிநடத்த வேண்டும் ***4:6*** | இரண்டு சாட்சிகள் இல்லாமல் புகார்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம் *5;19* |
| கர்த்தரின் பரிசுத்ததிலிருக்க பயிர்ச்சியளிக்க வேண்டும் *4:7-8* | பட்சபாதம் ஆர்க்கிற தலைவராய் இருக்க வேண்டாம் *5:21* |
| வார்த்தையிலும் நடக்கையிலும் சாட்சியாய் இருக்க வேண்டும் *4:12* | அவசரப்பட்டு எவரையும் நியமிக்க வேண்டாம் *5:22* |
| விதவைகளை கனம்பண்ண வேண்டும் *5:3* | வாக்குவாதங்களிலிருந்து விலக வேண்டும் *6:4-5* |
| பரிசுத்தத்தை காத்துக்கொள்ள வேண்டும் *5:22* | பேராசைக்கரரையும், சுவிசேஷத்தை விற்கும் பணப்பிரியரையும் விட்டு விலகி இருக்க வேண்டும் *6:5-11* |
| நீதியை, விசுவாசத்தை, அன்பை, பொறுமையை மற்றும் மென்மையான தன்மையையும் நாட வேண்டும் *6:11* | சீர்கேடான வீண்பேச்சையும் ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையையும் விட்டு விலக வேண்டும் *6:20* |